யட்டிநுவர பிரதேச சபை - 2022

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

.

யட்டிநுவர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யட்டிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 வெளித்தரப்பினர்களால் சபைக்கும் சபையினால் வெளித்தரப்பினருக்கும் எதிராக வழக்குகள் தொடரப்பட்டிருந்த துடன் அதற்காக வழக்கு கட்டணங்களாக ரூபா 283,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் அவை தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை | 2023 ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வழக்குகள் தொடர்பான தகவல்களை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 8,168,219 ஆன நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது இத்தவறினை சீராக்கம் செய்யப்படும் | பெறவேண்டிய வட்டியை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்லும் கட்டிட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 7,568,117 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | கட்டிட நிர்மாணக் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய விளம்பர பதாதை வருமானம் ரூபா 1,288,425 ஆக இருநத போதும் அது 7பா 472,435 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 815,990 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அறவிட வேண்டிய நிலுவை தொகைள் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கைவிடப்பட்டிருந்த ரூபா 416,500 ஆன 02 செயற்திட்டங்கள் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | எதிர்வரும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் மூலம் அங்கீகாரத்தைப் பெற்று பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் சரியாக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நடைமுறைக் கணக்கின் காசேட்டின் படி ரூபா 65,976,479 ஆக இருந்த போதும் அது ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 66,671,689 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 695,210 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் சீராக்கம் செய்யப்படும் | காசு மீதி சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்திருந்த மொத்தம் ரூபா 267,729 ஆன தளபாட இராக்கைககள் மற்றம் நூலக புத்தகங்கள் மூலதன வருமானம் மற்றம் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படும் | நன்கொடை வருமானம் மற்றும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 17,707,718 கூட்டுத்தொகையான 02 சொத்து விடயங்கள் மற்றும் பொறுப்பு விடயமொன்றிற்குரிய ஆரம்ப புத்தகங்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,560,639 ஆக இருந்தமையால் ரூபா 748,579 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிப்பதற்கு முன்னர் இவ்வேறுபாடுகளை இனங்கண்டு சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங் கண்டு கணக்குகள் சீர் செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,149,176 ஆன 03 கணக்கு மீதிகள் அட்டவணைகள், உரிய கோவைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டவணைகள் சரியாக் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவு | அதிகார பிரதேசத்தில் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த ஹொட்டல்களிலிருந்து 1 சதவீத கட்டணமான ரூபா 7,069,651 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் ஒரு ஹோட்டலில் இருந்து கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு தொகுதியை பெற்றுக் கொள்ளாமல் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டுக்காக பணத்தை அறவிடும் போது சரியான கணக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வருமான விபரங்களை வெவ்வேறாக பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அதிகாரசபை அபிவிருத்திச் சட்டம் மற்றும் 1996 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய 935(6) ஆம் இலக்க வர்த்தமானி | 2018 ஆம் ஆண்டின் போது 05 ஏக்கர்கள் 17.09 பிரிக்கப்பட்ட காணியில் சபைக்கு பொது நடவடிக்கைகளாக கிடைக்க வேண்டிய காணியின் அளவு 65.05 பேர்ச் ஆக இருந்த போதும் 35.07 பேர்ச் காணி பெற்றுக் கொள்ளப்பட்டு எஞ்சிய 29.9 பேர்ச் அளவிலான காணிப்பகுதிக்காக சட்ட ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | விண்ணப்பதாரரின் எழுத்து மூலம் வேண்டு கோளை கருத்தில் கொண்டு 35.07 பேர்ச் காணியை கையேற்பதற்கும் எஞ்சிய 29.9 பேர்ச்களிற்காக 10 சதவீத அளவில் கணக்கிடப்பட்டு பணத்தை பிரதேச சபையில் வைப்புச் செய்வதற்கு பரிந்துரைத்ததாக | சட்ட ஏற்பாடுகளின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/07 இலக்க 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட இடைக்கால சட்டக்கோவையின் 39 ஆம் பிரிவு | விளம்பரப் பதாதைகள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாத இருந்ததுடன் 76 விளம்பர பதாதைகளில் இருந்து ரூபா 217,750 தொகையான கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது இந்நிலுவைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்டு கட்டணங்கள் நாளதுவரையாக அறவிடப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 64,033,946 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 65,403,743 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | | | | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,467,800 | 3,714,234 | 3,508,330 | 4,895,528 | 5,721,800 | 5,623,325 | 3,188,908 | 4,689,134 |
| (ii) | வாடகை | 1,300,000 | 1,051,100 | 269,170 | 785,430 | 1,542,060 | 387,360 | 301,335 | 3,500 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,548,000 | 2,170,513 | 2,170,513 | -- | 1,888,000 | 1,687,714 | 1,782,515 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 85,350,200 | 87,245,363 | 81,142,699 | 97,489,632 | 85,888,700 | 87,749,495 | 417,684 | 91,386,968 |
| | மொத்தம் | 92,666,000 | 94,181,210 | 87,090,712 | 103,170,100 | 95,040,560 | 95,477,894 | 5,690,442 | 96,079,602 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்த வருமான மூலங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 96,079,602 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 103,170,100 ஆக இருந்த காரணத்தினால் நிலுவை வருமானம் 07 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | 2023 ஆம் ஆண்டில் வருமானங்களை சேகரிப்பதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கருத்திற் கொள்ள வேண்டிய வருமானத்தை சேகரிக்கும் சதவீதத்தை காண்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | **வீதவரி**<br>வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 5,000 இற்கும் 10,000 இற்கும் இடைப்பட்ட 103 வீதவரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 674,774 தொகையும் ரூபா 10,000 இற்கும் ரூபா 50,000 இடைப்பட்ட 29 வீதவரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 535,877 தொகையும் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 06 வீதவரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 467,064 ஆன வீதவரி நிலுவையொன்று காணப்பட்டது. | வீதவரி நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

**(இ) நீர் வரி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீர் க் கட்டண வருமானம் ரூபா 621,723 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட பெறவேண்டிய நீர் கட்டண வருமானம் ரூபா 575,116 ஆன மீதியொன்று காணப்பட்டது | பாவனையாளர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நீர் இணைப்பினை துண்டிக்கும் அறிவித்தலை அனுப்புவுதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுதல் வேண்டும் |

**(ஈ) வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கடை வாடகையின் மொத்ம் ரூபா 785,430 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்த நிலுவை கடை வாடகை மீதி ரூபா 231,000 ஆக இருந்தது. | கொடுப்பனவை தவிர்ப்புச் செய்யும் கடை உரிமையாளர்களுக்காக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதாக | கடை வருமானத்தை உரிய காலத்தில் அறவிடல் வேண்டும் |

**(உ) முச்சக்கர வண்டி கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் பதிவுசெய்யப்பட்ட 42 முச்சக்கர வண்டி தளங்களில் மொத்தமாக பதிவு செய்யப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை 509 ஆக இருந்தது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக 215 மற்றும் 309 முச்சகர வண்டிகளுக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்காமை காரணமாக ரூபா 419,200 ஆன வருமான மொன்று இழக்கப்பட்டிருந்தது. | முச்சக்கர வண்டி நிறுத்துமிடங்களை மேவுகை செய்யும் வகையில் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டதுடன் அதன் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் அனுமதிப்பத்தரிங்களை பெற்றுக்கொள்வதற்கு அறிவூட்டியுள்ளதாக | நிலுவை முச்சக்கர வண்டிக் கட்டணங்களை அறவிட வேண்டும் |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,701,869 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 94,162,308 ஆகவும் இருந்தது. | இக்கட்டணங்களை 2023 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுதல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்று வதற்காக உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எந்தவொரு விடயங்களுக்கு உப உறுப்புரைகள் பிறப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து உப உறுப்புரைகளை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உப உறுப்புரைகளை பிறப்பிக்க வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் சபை நிதியத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றுவதற்கு மதிப்பிடப் பட்டிருந்த ரூபா 1,249,377 ஆன 04 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டங்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட போதும் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்கள் காரணமாக தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |
| (இ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 06 நீர் செயற் திட்டங்கள் செயற்படுவதுடன் அச்செயற்திட்டங்களில் 2022 ஆம் ஆண்டிற்காக நீர் மாதிரி பரிசோதனையில் SLS 614/2013 இன் பிரகாரம் இருக்க வேண்டிய நியம நிலைமை இல்லாமை காரணமாக நீர் பாவனையாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்கு சபை தவறியிருந்தது. | நீர் மாதிரி பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 பெப்ரவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலம் கடந்த 109 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலம் கடந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை அனைத்தையும் புதுப்பிபதற்கு கடிதங்கள் அனுப்பியுள்ளதுடன் சில அனுமதிப்பத்திரங் களுக்காக சில அனுமதிப்பத்திரங்களுக்காக இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ)** | **பெறவேண்டிய கணக்குகள்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 5,604,065 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் ரூபா 2,454,484 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,043,007 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்குகள் தொடர்பாக கவனம் செலுத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவிடல் வேண்டும் |
| **(இ)** | **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 02 கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 70,651,884 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கும் 5 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் கூட்டுத்தொகை ரூபா 12,038,848 ஆகவும் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,863,536 ஆக இருந்தது. | தகவல் சரியாக தேடி 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கினை தயாரிக்கும் போது சீராக்குவதாக | செலுத்த வேண்டிய கணக்குகள் தீர்வு செய்யப்பட வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **சபையின் சொத்துக்கள் பரிசோதனை**<br>சபை பயன்படுத்தும் 39 காணிகளின் உரித்தை உறுதிப் படுத்துவதற்கு தேவையான உறுதிகள் அல்லது கையளிப்பு கட்டளைகள் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே உறுதியில் குறிப்பிடப்பட்ட அளவுகள் மற்றும் எல்லைகளை தீர்வு செய்வதற்கு திட்ட வரைபடங்களை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | காணி சிலவற்றை கையேற்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | சபைக்கு சொந்தமான காணிகளில் சட்டரீதியான உரித்தை உறுதிப்படுத்துதல் வேண்டும் |
| **(ஆ)** | **சொத்துக்களில் இருந்து பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ளாமை**<br>நன்கொடையாக கிடைத்திருந்த 06 பேர்ச் அளவிலான வில்அமுன அம்பலம் பெயரிலான காணி மற்றும் கட்டிடங்கள் கண்டி கொழும்பு பிரதான வீதி எல்லையில் அமைந்துள்ள பெறுமதி கூடிய ஆதனம் ஒன்றாக இருந்ததுடன் அதன் உரித்தினை உறுதிப்படுத்தும் எவ்வித ஆவணம் ஒன்றும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை அவ்வாறே இந்தக் காணியையும் கட்டிடத்தையும் வர்த்தக நடவடிக்கைகளுக்கோ அல்லது வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | இக்காணியின் உரித்தினை உறுதிப்படுத்தும் ஆரம்ப கடிதங்களை தேடிக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. கட்டிடம் 2016 ஆம் ஆண்டு முதல் 02 ஆண்டுகள் அளவில் உக்காத கழிவுகளை சேகரிக்கும் நிலையம் ஒன்றாக பேணி செல்லப்பட்டிருந்ததுடன் முதியோர் பாதுகாப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்தி சொத்துக்களை பயன்படுத்த வேண்டும் |
| **(இ)** | **கையேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| (i) | இரண்டு ஏக்கர் ஆன கிரிமினிய கழிவு பொருள் தொகுதி அமைந்துள்ள காணியை கையேட்பதற்காக ரூபா 2,600,000 தொகை 2020 ஜனவரி 22 ஆம் திகதி பிரதேச செயலாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் காணியின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை | இக்காணியை கையேற்பதற்கு உரிய அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் இணக்கப்பாடு இதுவரை கிடைக்கவில்லை.∴. | சொத்துக்களை கையேப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பிரதேச சபையில் அதிகார பிரதேசத்திற்குரிய 04 சொத்துக்களை கையேற்பதற்கு ரூபா 119,000 ஆன செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் கமநல சேவைகள் திணைக்களத்திலும் இருந்து கிடைத்திருந்த உழவு இயந்திரத்தின் உரித்தும் சபைக்கு கையேற்கப்பட்டு இருக்கவில்லை | பிரதேச செயலகத்தின் ஊடாக கையேற்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த உழவு இயந்திரத்தை கையேற்பதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனைத்து ஆவணங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரித்தை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஈ)** | **விளைவற்ற / குறை பயன்பாட்டிலான சொத்துக்கள்** | | |
| | ரூபா 17,363,377 ஆன 07 வாகனங்கள் விளைவற்றும் குறை பயன்பாட்டிலும் காணப்பட்டன. | 03 வாகனங்கள் விளைவற்று காணப்படு வதால் தேவைப்பாடு உள்ள நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான வேலை திட்டம் ஒன்றைத் தயாரித்து வருவதாகவும் 03 வாகனங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துவருவதுடன் ஒரு வாகனத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | குறித்த செயற்பாடுகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும் |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **பொத்தெபிட்டிய நூலகத்தின் கூரையை திருத்தம் செய்தல் ரூபா 936,216** | | |
| **i** | வேலை விடை இலக்கம் 02 கூரைக்கு அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளை வழங்கி பொருத்தும் செயற்பாட்டின் பௌதீக பரிசோதனை பிரகாரம் 102.88 சதுர மீற்றர்களுக்காக ரூபா 212,447 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் வேலை விடயம் 01 இன் கீழ் பழைய கூரையை அகற்றுவதற்காக 102.88 சதுர மீற்றர்களுக்காக ரூபா 12,860 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறித்த சங்கத் அறிவிக்கப்பட்டதன் பின்னர் கூடுதலாக கொடுப்பனவு செய்த ரூபா 235,630 தொகையை சபைக்கு பணமாக செலுத்துவதற்கு இணங்கியுள்ளனர் | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவினை பரிந்துரை உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **ii** | வேலை விடயம் 07 இன் கீழ் நீர் வழிந்தோடும் (Down Pipe) 02 இற்காக ரூபா 10,323 ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |

**(ஆ) கன்னொருவ ஆயுர்வேத நிலைய கட்டிட நிர்மாணம் ரூபா 2,272,708**

(i) 05 ஆம் இலக்க வேலை வேலை விடயத்தின் கீழ் தளத்திற்கான (Slab Beam Formwork) பௌதீக அளவீட்டின் பிரகாரம் 5.34 சதுர மீற்றர்களுக்காக ரூபா 24,525 ஒப்பந்தக்காரர்களுக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் Slab Formwork இன் கீழ் 14.36 மீற்றருக்காக ரூபா 29,926 ஒப்பந்தகாரருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது

(ii) கொங்கிரீட் தளத்திற்காக 4.25 மீற்றர் நீளம் ஆன 12 கம்பிகள் மற்றும் 2.3 மீற்றர் நீளமான 04 கம்பிகள் கூடுதலாக கணக்கிடப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 35,308 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பட்டியலின் வேலை விடய இலக்கம் 03 இன் பிரகாரம் பௌதீக ரீதியாக இனங்காண முடியாதிருந்தமையால் 150 கி.கி சுற்று உருக்குக் கம்பிக்காக ரூபா 141,900 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கட்டிடத்தின் படிகளுக்காக 136.15 கி.கி உருக்கு சுற்றுக் கம்பி (Reinforcement) இடப்பட்டதாக பௌதீக பரிசோதனையின் போது இணங்கான முடியாமல் இருந்ததுடன் 150 கி.கி சுற்று உருக்குக் கம்பிக்காக ரூபா 141,900 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கட்டிடத்தின் படிகளுக்காக 136.15 கி.கி சுற்று உருக்க கம்பி (Reinforcement) இடப்பட்டதை பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தாமல் ரூபா 128,798 ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

கூடுதலாக கொடுப்பினவு செய்யப்பட்டுள்ள தொகையான ரூபா 207,176 தொகையை பிடிகாசினை கொடுப்பனவின் போது கழித்துக்கொள்வதற்காக குறித்த ஒப்பந்த சங்கத்துடன் கலந்துரையாடி உள்ளதுடன் அவர்கள் அதற்காக இணைக்கப்பாட்டு கடிதத்தை வழங்கி உள்ளனர்.

நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவினை பரிந்துரைத்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்